# மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் (DTCP) ஈரோடு மாவட்டம்

## வாணிப்புத்தூர் பேரூராட்சி

ஈரோடு மாவட்டம், கோபிசெட்டிபாளையம் வட்டம், வாணிப்புத்தூர் பேரூராட்சி மற்றும் கிராமம், ரீ.ச.எண்-286/2B1 & 2C1-ல் அமையும் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கான தொழில்நுட்ப ஒப்புதல் வரைபடம் (திட்டமில்லா பகுதி)

அளவு : 1 அங்குலம் = 66 அடி (1:800) (ALL DIMENSIONS ARE IN METER)

ONLINE APPLICATION NO: FH5RQKXE

**குறிப்பு :**

| | | |
|---|---|---|
| மனைப்பிரிவின் மொத்தப்பரப்பு | : | 2.36 ½ ஏக்கர் (அ) 9575.00 சமீ |
| கோரிய மனைகள் | : | 49 |
| ஒதுக்கிய மனைகள் | : | 47 |
| மனைப்பிரிவின் எல்லை | ---------------- | |
| நிலையிலுள்ள சாலை | ---------------- | |




**உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்டவை**

மனைப்பிரிவின் சாலை : 3273.15 சமீ

பூங்கா : {மனைப்பிரிவின் பரப்பு- மனைப்பிரிவு சாலைகளின் பரப்பு}x10%

: {9575.00 - 3273.15} x 10% = 630.18 சமீ (10.0%)

(மனுதாரரால் அரசு வழிகாட்டி மதிப்பீடு தொகை செலுத்தப்பட்டுள்ளது)

பொது உபயோகம் மற்றும் மின்பகிர்மான கழகத்திற்கு தேவையான பரப்பு : {மனைப்பிரிவின் பரப்பு - மனைப்பிரிவு சாலைகளின் பரப்பு} x 1.0%

: {9575.00 - 3273.15} x 0.5% = 31.50 சமீ

பொது உபயோகம் - (A) : 33.36 ச.மீ (0.52%)

பொது உபயோகம்(A) தான ஆவண எண்:575/2023 நாள்:14-03-2023-ல் ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது.

**தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் மின் பகிர்மான கழகத்திற்காக உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்டவை**

பொது உபயோகம் - (B) : 33.56 ச.மீ (0.53%)

பொது உபயோகம்(B) தான ஆவண எண்:576/2023 நாள்:14-03-2023-ல் ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது.

**கட்டிட வரம்பு :**

9.0மீ வரை அகலம் உள்ள சாலைகளுக்கு 1.50 மீ விடப்படல் வேண்டும்

9.0மீ-க்கு மேல் 18.0மீ வரை அகலம் உள்ள சாலைகளுக்கு 3.0 மீ விடப்படல் வேண்டும்

**மூலை முடக்கு:**

12.0மீ வரை அகலம் உள்ள சாலைகளுக்கு 1.50மீx1.50மீ-ம் விடப்படல் வேண்டும்




## நிபந்தனைகள்

1. அரசாணை எண்-18 ந.நி மற்றும் கு.நீ.வ துறை நாள் 04.02.2019 (ம) அரசாணை எண்-16 ந.நி மற்றும் கு.நீ.வ நாள் 31.01.2020 ன் படி மனைப்பிரிவு சாலை, 0.5% பூமி உள்ளாட்சிக்கும் மற்றும் 0.5% பூமி TANGEDCO அல்லது உள்ளாட்சிக்கு தானமாக பெற நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.
2. அரசாணை எண் 181 வீ.வ (ம) ந.வ.துறை நாள் 09.12.2020-ல் தெரிவித்துள்ளவாறு சாலைகள், மழைநீர் வடிகால் வசதி மேல்நிலை நீர்தேக்க தொட்டியுடன் கூடிய குடிநீர் வசதிகள் (ம) தெருவிளக்குகள் ஆகியவை உள்ளாட்சியின் விருப்பத்திற்கு ஏற்ப அமைக்கப்பட்ட பின்னர் இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.
3. அரசாணை எண் 141 வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சிதுறை நாள்:16.07.2022-ன் படி நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்
4. இம்மனைப்பிரிவிற்கு உள்ளாட்சி இறுதி ஒப்புதல் அளிக்கும் முன் இடத்தினை எந்தத்துறையாலும் நில ஆர்ஜித நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை என்றும், எந்த துறைக்காகவும் நில ஆர்ஜிதப்பட்டியல் மாவட்டவருவாய் அலுவலருக்கு அனுப்பப்படவில்லை என்றும். வாணிப்புத்தூர் பேரூராட்சி செயல் அலுவலர், அவர்கள் உறுதி செய்து கொள்ளவேண்டும்.
5. நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என்று அறியப்பட்டாலோ அல்லது மனைப்பிரிவுக்கு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டாலோ மனைப்பிரிவுக்கு வழங்கப்பட்ட தொழில்நுட்ப ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்பும் இன்றி நகர் ஊரமைப்பு இயக்குநர் சென்னை அவர்களால் ரத்து செய்யப்படும்.
6. விற்பனைக்குண்டான மனைகளை விற்பனை செய்யும் போது இவ்வரைபட நகலோடு நகர் ஊரமைப்புத் துறையில் ஒப்புதல் அளிக்கப்பட்ட ஆணையின் நகல் மனை வாங்குபவர்களுக்கு கட்டாயம் வழங்கப்பட வேண்டும்.
7. ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தை எந்த வித மாற்றம் விடுதலின்றி மனைப்பிரிவு நுழைவாயிலில் 6'x 4'என்ற அளவிலான நிரந்தர தகவல்பலகை மூலம் பொதுமக்கள் பார்வைக்கு நிரந்தரமாக பிரசுரிக்கப்பட வேண்டும்.
8. நகர் ஊரமைப்பு துறை சட்டப்பூர்வமாக தொழில்நுட்ப அனுமதி அளிப்பதன் மூலம் விண்ணப்பதாரரின் பேரில் உள்ள நில உரிமையை உறுதிப்படுத்தவில்லை தொழில்நுட்ப அனுமதி அளிப்பதற்கு முன்பு விண்ணப்பதாரரின் விண்ணப்பத்துடன் சமர்ப்பித்த ஆவணங்களில் (கிரையப்பத்திரம், குத்தகை பத்திரம், பட்டா, தானப்பத்திரம், பொது அதிகார பத்திரம் மேலும் பல) விண்ணப்பதாரர் வளர்ச்சி செய்ய உரிமை உள்ளதா என்று மட்டுமே சரிபார்கப்படுகிறது. அதன் மூலம் முதற்கட்டமாக விண்ணப்பதாரருக்கு வளர்ச்சி செய்ய உரிமை உள்ளதா என்று பார்க்கப்படுகிறது.
9. பிரஸ்தாப மனைப்பிரிவுக்கு இவ்வலுவலகத்தால் தொழில்நுட்ப ஒப்புதல் மட்டுமே வழங்கப்படுகிறது. மனுதாரின் நில உரிமத்தினை உறுதி செய்த பின்னரே உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.
10. பிரஸ்தாப மனைப்பிரிவு அமையும் இடம் குறித்து நீதிமன்ற வழக்கு ஏதேனும் நிலுவையில் உள்ளது என அறியப்படின்இவ்வுத்தரவு செல்லதக்கதல்ல.
11. மனைப்பிரிவினை சுற்றி சுற்றுசுவர் (COMPOUND WALL) அமைக்கப்பட்டிருப்பின் அதனை அகற்றி அருகிலிருக்கும் இடத்திற்கு இணைப்பு பாதை அமையும் வகையில் சுற்றுசுவர் இடித்து அப்புறப்படுத்தப்பட வேண்டும்.
12. மாவட்ட புவியியல் மற்றும் சுரங்கத்துறை ஈரோடு கோட்டம், ஈரோடு அவர்களின் கடித எண் 758/கனிமம்/2022 Dated:29.12.2022- மேற்படி கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு மனுதாரின் இடத்திலிருந்து 300மீ சுற்றளவிற்குள் எந்தவித குவாரியும் நடைமுறையில் இல்லை என குறிப்பிடப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் இம்மனைப்பிரிவிற்கு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கப்படுகிறது. இதனை உள்ளாட்சி உறுதி செய்த பின்னரே இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.

**SWP / DTCP / ERODE / LAYOUT APPROVAL NO:129/2023**

| | |
|---|---|
| அளவர்/ உதவி வரைவாளர் | (signature) |
| வரைவாளர் நிலை-III | (signature) |
| கட்டிடக்கலை/ திட்ட உதவியாளர் | (signature) |

Signature Not Verified
Signed by: Assistant Director
Location:Erode
Date:2023.04.20 10:07:40

நகர் ஊரமைப்பு துணை இயக்குநர்(பொ)
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்
ஈரோடு மாவட்டம்